பெரியோர்கள் சரித்திரம்

ஓம்

ஞான வள்ளல்! அறிவுக் கடல்

ஞானசம்பந்தரின் அவதாரம்

இந்து மதத்தின் காவலர்

ப்ரம்மகுரு



ஸ்ரீலஸ்ரீ
ம. கிருஷ்ணாநந்த சுவாமிகள்
அவர்கள்

கோ. ஆ. வீர. மடாலய அதிபர்,

திருக்களர் P.O. மன்னுக்குடி தாலுக்கா.

(தஞ்சை மாவட்டம்)

ஆசிரியர்:

விபூதி வீரமுத்து சுவாமிகள்.

முன்னாள் முதலமைச்சர்
ஸ்ரீ M. பக்தவத்ஸலம் B. A., B. L.,
அவர்கள் அளித்த

மதிப்புரை.

தெய்வ, தேச பக்தியை பாதுகாக்கும் தீர்க்கதரிசியாக விளங்கும் சித்தர் ஸ்ரீலஸ்ரீ விபூதி வீரமுத்து சுவாமிகள் அவர்களால் எழுதப்பட்டுள்ள இந்த நூல் வருங்காலச் சந்ததிகட்கும் நீதி நெறி காட்டும் பாடமாக விளங்கத்தக்கது. ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணானந்த சுவாமிகள் அவர்களைப்போன்ற மஹான்களாலேயே தர்மம் தழைத்தோங்க முடியும் என்பது இந்த நூலில் அவரைப்பற்றிப் படித்ததும் நன்கு தெரிகிறது.

இங்ஙனம்,
M. பக்தவத்ஸலம் B. A., B. L.,


டில்லி சர்க்கார் முன்னாள் சட்டமந்திரி ஸ்ரீ C. R. பட்டாபிராமன் பார்-அட்-லா அவர்கள் அளித்த

மதிப்புரை.

பேச்சிலும், எழுத்திலும், தெய்வீகத்துறையிலும் புகழ் பெற்று விளங்கும் உயர்திரு விபூதி வீரமுத்து சுவாமிகள் அவர்கள் மஹான் ஸ்ரீலஸ்ரீ ம. கிருஷ்ணாநந்த சுவாமிகள் அவர்களைப்பற்றி இந்தச்சரித்திர நூலில் எழுதியிருப்பதானது என்மனதைப் பரவசப்படுத்திவிட்டது. இந்த நூற்றாண்டின் நாயன்மார்களில் ஒருவராக ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணாநந்த சுவாமிகள் அவர்கள் இந்துதர்மத்தைப் பாதுகாத்து ஆன்மகோடிகளை இரட்சித்து வருவது நாம் செய்தபாக்யமாகும். இவரைப்போல வே மற்ற மடாதிபதிகளும் புனிதமாகப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

C. R. பட்டாபிராமன் பார்-அட்-லா



பிர்ம்மஞானி, சகல வேத சாத்திரங்களையும், தொ[illegible]
தத்துவங்களையும், அனைத்து யோக சாதனங்களையும் சர்வ மத நுட
பங்களையும், கலைகள் அனைத்தின் கருத்துக்களையும், புனித மனித
பிறவியின் கடனையும், மதாச்சாரியார்களின் மகத்தான பொறு
புக்களையும் ஆராய்ந்துணர்ந்த அறிவுக்கடல், அறிந்தனவற்றை
ஆக்க முறையிலே ஆற்றிக்காட்டும இலட்சியவாதி, ஆதீனகர்த்த
கட்கு அறநெறி காட்டும் ஆசான், சொல்லிலும் நினைவிலும் செயலி
லும், பரிசுத்தமான சத்தியவந்தர், அல்லும் பகலும் அரும்பாடு
பட்டு உழைத்து உழைத்து ஆதீனத்தை உருவாக்கிய அண்ணல்
ஐம்புலன் பொறிகளை அடக்கி, அநித்திய உலக சுகானுபவங்கள்
அனைத்தையும் வெறுத்த அண்ணல் திருஞானசம்பந்தரின் திரு
அவதாரம், இந்து மதத்தின் காவலர், சத்திய நெறிகளும், சைவமும
தழைக்கச் சலியாது உழைக்கும் உத்தம ஞானி. பல நூல்களின்
பேராசிரியர், இரக்ககுண சீலர், ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின்
திறவுகோல் என்பதைச் சிந்தித்துணர்ந்த சித்தர், ப்ரம்மஞானகுரு

ஸ்ரீலஸ்ரீ


ம. கிருஷ்ணானந்த சுவாமிகள்

அவர்கள்

கோ. ஆ. வீர. மடாலய அதிபர்,

திருக்களர் P. O. மன்னார்குடி தாலுக்கா.

(தஞ்சை மாவட்டம்)



இந்த நூற்றுண்டின் இந்து மதத்தின் மடாலயங்களின் சரித்திரத்திலே
ஞானப்பிரகாசத்திற்கும், மதத்தின் தொண்டிற்கும், மக்கள் தொண்டிற்கு
தெய்வ பிரச்சாரத்திற்கும், மடத்தின் தர்மச் சொத்தை வளர்த்துப் பாதுகாத்
ஆன்மகோடிகள் புனித நெறிகண்டு மேல்வீடு அடையும் மார்க்கத்தைக்காட்டு
தேவலட்சியத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது கோ. ஆ. வீர. மடாலய
ஒன்றுதான்.

35 ஏக்கர் நிலத்தோடும், 75 000 ரூபாய் கடனோடும் மிக எளிய நிலைய
சரிந்து சாயும் தருவாயில் இருந்த இந்த மடத்திற்கு இரட்சகராக உயிர்கொடுத்
தூக்கி நிமிர்த்தி கம்பீரமாக வீர நடை போடச்செய்தவர் மஹான் ஸ்ரீல
ம. கிருஷ்ணனந்த சுவாமிகள் அவர்கள்தான் கோயிலூர் மடத்தின் கிளையேதா
இந்த மடம் என்று அந்த சுவாமியார் வாதஞ்செய்கின்றாரேயொழிய இன்று கோ
லூர் மடமே இந்த மஹான் ஆதரவு தந்நால்தான் பிழைக்க முடியும் என்ப
அங்கும் சென்று நன்கு விசாரித்து தெரிந்துகொண்டேன் இரவு பகல் இறை
பாட்டிலேயே எண்ணங்கொண்டவர் ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள் அவர்க
ஆயினும் அதோடு நிறுத்திக்கொள்ளாமல் புனித மடம் சிறப்பாக இருந்தால்தா
தெய்வத்தொண்டை நிரந்தரமாக ஆற்றமுடியும் என்ற எண்ணத்தோடு உ
த்துப் பாடுபடும் பாட்டாளி போல வயல் கரைகட்குத் தானே நேரில் சென்
வெயிலையும், குளிரையும் பாராமல் சாகுபடி செய்து விவசாயத்தை நன்
செய்து வருவாயைப் பெருக்கி பழைய கடன்களை அடைத்து இப்போது சும
350 ஏக்கர் நிலமுள்ள மடமாகச் செய்துவிட்டார் ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணனந்தசுவா
கள் அவர்கள்: தன்னிடமிருக்கும் நிலத்தை உடனே எடுத்துக்கொள்ளுங்க
என்று சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுத்து மற்ற மிராஸ்தார்கட்கும் நற்புத்
புகட்டுகிறவர் இவர்தான்

இந்த ஒப்பற்ற மஹானைக் கண்மூடித்தனமாகக் குறை கூறுகிறவர்க
நான் பல கோடி ஆஸ்திகத் தேசாபிமானிகளின் சார்பில் எதிர்க்கின்றேன், தமி
வளர்க்கவும், தமிழ்க் கலைகளை வளர்க்கவும், மதப் பிரச்சாரத்திற்கும் அன்னதா
த்திற்கெனவும், திருப்பணி தர்மங்கட்கும், உற்சவங்கள் நடத்தவும், அனா
இல்லங்கட்கும், கல்வி வளரவும், ஏழை விவசாயிகள் சாகுபடி செய்யவும் கிரா
முன்னேற்றத்திற்கும் இலட்சக்கணக்கான ரூபாயை வாரி வாரி வழங்கி வருகி
றார் சுவாமிகள். சிபிச்சக்கரவர்த்தியை நிகர்த்த ஜீவகாருண்யச் செம்மலாக
கர்ணனை நிகர்த்த கொடை வள்ளலாகவும், திருஞானசம்பந்தரைப்போன்ற மத
சாரியாராகவும் திகழுகின்றார் ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள் அவர்க

நேர்மையின் சிகரம்

ஞான வள்ளல், இந்து தர்மத்தின் காவலர், ஒப்பற்ற மதாச்சாரியர் ஸ்ரீலஸ்ரீ

ம. கிருஷ்ணானந்த சுவாமிகள்

ஆங்கிலம், ஹிந்தி போன்ற மொழிகளிலும் வெளியாகும் இந்நூலி
மற்றைய பதிப்புகளிலும் இப்பெரியாரின் உயரிய வாழ்க்கையின் சிறி
இலட்சியமானது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இப்பெரியாரின் புக
தென்னாட்டில் மட்டுமல்லாது வடநாட்டிலும், வெளிநாடுகளிலும், பர
வேண்டுமென்பதற்காகவே, இவரது சரிதை மிக விளக்கமாகப் பல பக்க
கள் எழுதப்பட்டுள்ளது. இவரது அரிய குணாதிசயங்களின் மேன்மையையும்
இவரது தயாள சிந்தையினையும், பெருந்தகையினையும் பற்றி மக்கள் நன்
அறிந்துகொள்ளலாம்.

கோடிப் பொன் கொட்டி வைத்தாலும் நேர்மை தவறமாட்டா
உள்ளத்தை இறைவனுக்கு இருப்பிடமாக்கி நேர்மையான சிந்தனையும்
வஞ்சகமற்ற வெள்ளையான உள்ளமும், புனிதமான தெய்வீகத் தேசியப்பணி
களிலே தயக்கமில்லாது பங்குகொண்டு தன்னலமற்றதைச் சீரிய முறையில்
ஆற்றும் புனித நோக்கமும் உடையவராவார். ஒருவர் தனக்கு எதையு
சாதிக்கத்தக்க வல்லமையும், செல்வாக்கும் இருக்கிறதென்பதற்காக மாற்றே
ரின் சச்சரவுகளிலே தலையிட்டு ஒருதலைப்பட்சமாக நேர்மையற்ற முறைக்கு
ஆதரவுதரும் தீச்செயலை வன்மையாகக் கண்டிக்கக்கூடியவர். தனது
வாழ்க்கையை நேர்மைப் பாதையில் மிக திடமாகத் தெய்வ நம்பிக்கை
யோடும், விவேகத்தோடும் பெருநோக்கோடும் நடத்திச் செல்லுகிறார்.

The heights that great men reached and kept, were no
attained by sudden flight, but they, while their companion
slept were toiling upwards in the night. அதாவது உன்னத நிலையை
அடைந்தவர்களுக்கெல்லாம் மற்றோர் உறங்குகையில் விழித்திருந்தார்கள்
என்பதற்கிணங்க இப்பெரியார் தனது பணிகளிலும் இலட்சியங்களிலும்
ஆழ்ந்த சிந்தனையுடையவர். அலட்சிய வாழ்க்கை நடத்தாது எக்கருமத்தை
எடுத்தாலும் நன்கு ஆராய்ந்து அறிவுத்திறனோடு அப்பழுக்கற்ற முறையில்
பலரும் பாராட்டும் வண்ணம் வெற்றிகாணும் ஊக்கமுடையவர், செங்கோல்
செலுத்துவதாயினும் சிறு தொழில்புரிவதாயினும் எதற்கும் தகுதியான திறமை
யும் நுட்பமான மதியும் தீர்க்கமான சிந்தனையும்; நேர்மையான கொள்கை
யும் உடையவர், இன்பமாயினும், துன்பமாயினும் எதுவந்தாலும் எக்கருமத்
தும் மனச்சாட்சிக்கு விரோதமாக எதையும் செய்யமாட்டார்.

ஒப்பற்ற தேசாபிமானி: அஞ்சாநெஞ்சர்

ஞான வள்ளல், இந்து தர்மத்தின் காவலர், ஒப்பற்ற மதாச்சாரியார் ஸ்ரீலஸ்ரீ ம. கிருஷ்ணானந்த சுவாமிகள்

வெள்ளைய ஏகாதிபத்தியம் விரட்டப்பட்டு நாடு விடுதலை பெற்றதில் பெருமகிழ்ச்சிகொண்டு, அதிவேகமாக தேசியத்திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமென்ற ஆர்வமுள்ளவர். பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற தெய்வீகத் தேசியக் காரியங்கட்கு வாரி வாரி வழங்கும் வள்ளல் இவர். வாழ்வு வரினும் தாழ்வு வரினும் மனசாட்சிக்கு விரோதமாகவும் தேச நலனுக்குப் பாதகமாகவும், மக்கள் நன்மைக்குப் புறம்பாகவும் எதுவும் செய்யலாகாது என்ற திட வைராக்கியமுள்ள உத்தமர். நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவரேயொழிய உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் பணியமாட்டார். தனக்கு நேர்மையென்று பட்டதைச் சிறிதும் தயங்காது ஆற்றுகின்ற சீரிய உள்ளம் படைத்தவர். நீதி நெறியிலே பணச்செலவையோ சரீரப் பிரயாசையையோ பொருட்படுத்துகிறவரல்லர். நீதியானதைச் சாதிக்க அஞ்சமாட்டார். பட்டம், பதவி, பணம் இவற்றிற்கு ஆசைபட்டு தேச நலனுக்கு விரோதமாக எக்காரியமும் செய்யமாட்டார்.

ஆட்சிபீடத்திற்கும் அருகதையுள்ளவர்

சர்க்காரால் மக்களுக்கு நன்மை ஏற்பட்டு நாடு முன்னேற வேண்டுமானால், ஆட்சிபீடத்திற்கு இவரைப் போன்ற உத்தமமான பெரிய மனிதர்களைத் தான் மக்கள் பிரதிநிதிகளாக அனுப்ப வேண்டும். அப்பொழுதுதான் லஞ்ச ஊழலே இல்லாது நேர்மையான முறையில் மக்களுக்கு நன்மை செய்யப்படும், கல்வியறிவிலும், சிந்தனை சக்தியிலும் நடத்தையிலும் தமிழனுடைய மாண்பிற்கேற்ப உயிராபிமானமும், ஜீவகாருண்யமும், கொடைத்திறனும், இரக்க குணமும், தெய்வ பக்தியும், பொதுவில் அன்பும், ஈகையும், சத்தியமும், அறமும், வீரமும் பொதிந்த இந்த பெரிய மனிதர் பாரதத்தின் சிறந்த பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்: தேசாபிமானத்திற்கும் தெய்வநம்பிக்கைக்கும் நீதிப்பாதைக்கும் ஆணி வேராகத் திகழ்கின்றார். இவரைப்போன்ற கண்ணியமான பெரியமனிதர்கள் நிரந்தரமாக மக்கள் பிரதிநிதிகளாக ஆட்சிபீடத்திற்குச் சென்று நிர்வாகம் நடத்தினால் அது உண்மையிலேயே ராம ராஜ்யமாகு மென்பதில் ஐயப்பாடு இல்லை.

சொன்னவண்ணம் செய்வார்

ஞான வள்ளல், இந்து தர்மத்தின் காவலர், ஒப்பற்ற மஹாச்சாரியார் ஸ்ரீலஸ்ரீ ம. கிருஷ்ணானந்த சுவாமிகள்

வாய்வேதம் பேசுகிறவர் அல்ல இப்பெரியார். சொன்ன வண்ணம் செய்யும் கர்ம வீரர். எதற்கும் அஞ்சி எதிலும் பின்வாங்கமாட்டார். நீதியும் நேர்மையும் உடைய எக்காரியத்திலும பொருளாதாரத் துறையிலோ சரீரப் பிரயாசையிலோ தன்னை எத்துணை தூரம் ஈடு படுத்தவும் தயங்கமாட்டார் புனிதப் பணிகட்கு ஈயாது மறைத்துப் பணத்தைப் புதைத்து வைப்பவரல்ல சீரிய திட்டங்கட்காகத் தன்னை நாடி வந்தோரை ஆசைவார்த்தை பேசிப் போகச்சொல்லுபவருமல்ல ஆதரவு தேடி அண்டி வந்த ஏழைகளை "மேலை விடு போ" என்று சீறமாட்டார். தன்னலான உதவியை முழுமனதோடும் அன்போடும். ஆர்வத்தோடும் ஆற்றக்கூடியவர். நினைத்தால் சொல்லுவார் சொல்லுவதைக் கண்டிப்பாகச் செய்தே தீருவார்,

ஏழைகளைக் கன்றைக்கண்ட பசுப்போன்று பார்த்து பாட்டாளிகளைத் தன் உடன் பிறந்தாரென எண்ணி, அவர்களது அல்லல்களை அகற்றுவதிலே நாட்டங்கொண்டு நல்லது செய்வார். வேலையிட்டுக் கூலி குறைக்கமாட்டார் தங்களது குறைகளைத்தீர்க்கக் கோரும் மக்களிடம் கோபிக்கமாட்டார். உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் பணியமாட்டாரேயொழிய பாடுபடும் பாட்டாளிகளின் நிகரற்ற காப்பாளர் என்பதில் ஐயமில்லை. இந்தவகையில் தொழிலதிபர்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் இப்பெரியார் வழிகாட்டியாகத் திகழ்கின்றார் என்பது யாவரும் அறிந்தது. இந்த நாட்டிலுள்ள பெரிய மனிதர்கள் யாவருமே ஏழைகளைச் சுரண்டுகிறவர்கள் என்றும் பாட்டாளிகளின் இரத்தத்தை உறிஞ்சுகிறவர்கள் என்றும் செய்யப்படுகிற குற்றச்சாட்டுகட்கு இப்பெரியாரின் புனிதக் கொள்கையும், தாராளத்தன்மையும் பரந்த உள்ளமும் புனிதப் பண்பாடும் இரக்க சீலமும் சரியான மறுப்பாக விளங்குகின்றன. இவர் ஏழைகளின் காவலர் என்பது எல்லோரும் அறிந்தது.

இது நான் பொதுமக்களின் வாய்மூலமே நன்கு தெரிந்துகொண்ட உண்மை. நாட்டிலே மிக நல்லவரான இப்பெரியாரைப்பற்றிச் சரித்திர ஏட்டிலே தீட்ட நாட்டங்கொண்டு பல நாட்களாகவே பொதுமக்களிடம் இப்பெரியாரின் உத்தமத் தன்மையைப்பற்றி மிகச்சிறப்பாகக்கேட்டுவந்தேன்.

நீதியின் வேந்தர்
ஞான வள்ளல், இந்து தர்மத்தின் காவலர், ஒப்பற்ற மஹாச்சாரியார்
ஸ்ரீலஸ்ரீ ம. கிருஷ்ணனந்த சுவாமிகள்

அந்நிதிக்காரர்களின் எதிர்ப்பானது மலைபோல் வந்தாலும் துரும்பாக நினைக்கும் ஆண்மையுடையவர். ஆனல் பாவத்தைச்செய்யமிகப்பயந்தவர்; மாசற்ற உத்தமர் தனக்குள்ள உயர்ந்த நிலையைக்கொண்டு மற்றவர்களைக் கீழ்த்தரமாக நடத்துவதில்லை, மற்றவர்களை அலட்சியமாக எண்ணுவதும் இல்லை; பிறர் அல்லல் படுவதை கண்டு மனம புண்படும்படி எக்காரியத்தையும் செய்யமாட்டார். இறைவனிடம் தளராத நம்பிக்கையும் புண்ணியம் செய்தல் வேண்டும் இறைவன் அருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்ற புனித இலட்சியமுடையவர். அல்லலுறும் உயிர்களின் அவதி நீங்கவேண்டுமென்ற தயாள சிந்தனையும், இரக்க சீலமும் உடைய புனிதர்

சீரிய லட்சியவாதி

அன்பும், ஈகையும், அறமும், ஜீவகாருண்யமும், வஞ்சகமற்ற புனித சிந்தனையும், அச்சமற்ற ஞானமுற்ற தீரமும், தேச முன்னேற்றத்திலே ஆர்வமும், எளியார்க்குதவுவலே தாகமும் நினைத்ததைச் சாதிக்கத்தக்க நெஞ்சு ஊக்கமும் நன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வீரமும் ஆழ்ந்த சிந்தனையும், பொறுமையும் நிரம்பிய உயரிய தன்மை கொண்ட உத்தமர் இப்பெரியார்.

சத்திய சீலமுடைய இவர் எந்தச் சட்டசபை உறுப்பினரையும் பாராளுமன்ற அங்கத்தினரையும் (M. L. A. & M. P. யையும்) ராஜப்பிரமுகரையும் விடக் கிஞ்சிற்றும் எவ்வகையிலும் குறைந்தவரல்ல· சொல்லப்போனுல் பலரையும் விடப் பல வழிகளிலும் மேலானவரென்பது வெள்ளிடைமலை

மக்கள் புகழும் பெருந்தகையாளர்.

இப் பெரியாரிடம் மக்கள் வைத்துள்ள மதிப்பும் மரியாதையும் இவரது வட்டத்தில் நுழைந்ததுமே நன்கு தெரிகின்றது. பாமரர்களும் பணக்காரர்களும் அரசியல்வாதிகளாயினும் சுயேச்சைகளாயினும் பொதுவில் யாவருமே இப்பெரியாரை மனமார வாழ்த்திப் புகழ்கின்றனர். அப்பழுக்கற்ற கொள்கையினலும் தாராளத் தன்மையினலும் இரக்க சீலத்தாலும் சகோதர உணர்ச்சியினலும் பாவத்திற்குப் பயந்த புண்ணிய புனிதத் தன்மையினலும் ஏழைகளிடம் பரிவுகாட்டும் பரோபகாரச் சிந்தையினலும் மனிதர்களுடன் பேதமின்றி உள்ளன்பினேடு வஞ்சகமற்று பேராசையும் இன்றி வெள்ளையான உள்ளத்தோடு பழகி வறியார்க்குதவும் தெய்வப்பண்பாலும் மக்களின் ஒருமித்த அபிமானத்தைப் பெற்று முடிசூடா மன்னர் போன்று அன்பின் அரசராகவும் தர்மத்தின் காவலராகவும் ஜீவகாருண்யச் சேனதிபதியாகவும், பெருவாழ்வு வாழ்கின்றுர்.

ஞான வள்ளல், இந்து தர்மத்தின் காவலர், ஒப்பற்ற மதாச்சாரியார்

ஸ்ரீலஸ்ரீ

ம. கிருஷ்ணானந்த சுவாமிகள்

விடுக்கும் பொன்மொழிகள்.

சொல்லிலும், நினைவிலும், செயலிலும் பரிசுத்தமாக இருந்தால்தான் மனிதன் எதிலும் வெற்றிபெற முடியும். தேச சேவையும், தெய்வத் தொண்டுமே வாழ்க்கையின் இலட்சியமாக இருத்தல் வேண்டும்.

அன்பு, ஈகை, அறம், ஜீவகாருண்யம், பரோபகாரம், பெருந்தகை, சாந்தம், சத்தியம், நீதி, நேர்மை, தேசபக்தி, தெய்வபக்தி, விவேகம், வைராக்கியம், தானம், தவம், தன்மானம், முதலிய அரிய சீலங்களே உயரிய மனிதப் பிறவியின் சீரிய சீலங்களாகும்.

உலகிலே சாந்தி நிலவி பாரத நாடு முன்னேற தேசிய மிகப்புனித, சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டங்களையும், வெளிநாட்டுக் கொள்கைகளையும் ஆதரிக்க வேண்டுமென்று மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.


இந்திய மண்ணில் ஆக்கிரமிப்பு நடத்தியுள்ள பாக்கிஸ்தான், சைனு முதலிய நாடுகளை அப்புறப்படுத்த மக்கள் ஒன்றுபட்டு பாரதப் பிரதமரின் கைகளைப் பலப்படுத்துதல் வேண்டும்.

லோகமான்ய பால கெங்காதரத் திலகர், காந்திஜி, நேருஜி, பட்டேல்ஜி, வ. உ. சி. திருப்பூர்க்குமரனைப் போன்றோரின் அருந்தியாகத்தால் வந்த சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலே மக்கள் எல்லாவிதத் தியாகத்திற்கும் தயாராக இருத்தல் வேண்டும்.



உலக அரசியலின் ஒப்பற்ற மேதை, மாபெரும் ஜனநாயக நாட்டின் தலைவர், நான்கு வேதம், ஆறு சாத்திரம், தத்துவங்கள் தொண்ணுற்றாறிலும் தன்னைத் தான் உணர்ந்தோங்கும் தத்துவ ஞானி, விவேகத்தோடு வைராக்கியம் நிலைத்த வேதாந்தி, சர்வ மதங்களின் சாரங்களிலும், சத்திய நெறிகள் அனைத்தினிலும் சித்தம் வைத்து, சிந்தித்துச் செயலிலாற்றும் கருமயோகி, விஞ் ஞானத்திலும், வேதாந்தத்திலும் நிகரற்ற ஆராய்ச்சி வல்லுனர் இணையற்ற எழுத்தாளர், பல நூல்களின் கர்த்தா, பாரததேவியின் பரமபக்தர், பகைக்கஞ்சாது போரிட்டு பாரதநாட்டைப் பாது காத்த பல கோடி மக்களின் தலைவர், சைனு, பாகிஸ்தானின் மிரட்டலை முறியடித்து வெற்றிக்கொடி நாட்டிய வீரர், திரிகரண சுத்தியாலும், நிர்வாகத்திறனாலும், நேர்மையெனுஞ் செங்கோ லேந்தி, டில்லி அரியாசனத்தமர்ந்து, அண்டத்தின் அனைத்தின் தலைவர்கட்கும் அறிவெடுத்தோதும் அண்ணல், அஹிம்ஸாமூர்த்தி பரம ஏழைகளின் பாதுகாவலர், ஈடு, இணையற்ற ஞானக்களஞ் சியம், ஆளப்பிறந்தவர் தர்மச்சக்கரவர்த்தி, ஜனாதிபதி.

டாக்டர் S. ராதாகிருஷ்ணன் அவர்கள்



கல்லூரிப் படிப்போடன்றிச் சிந்தனையினாலும் மனிதன் கற்றோர் அறியா அறிவினைப் பெற்று கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைவராகலாம் என்ற தத்துவப் பயனுக்குச் சான்றாக, நினைவிலும், செயலிலும் தூய்மையினோடும், உயிர்களிடத்து உள்ளன்பினோடும் உண்மையான தேசபக்தியினோடும் தன்னலமென்பதே கிஞ்சுற்றுமின்றித் தனது கடமையைச் செயலாற்றினால் தரணிக்கும் தலைவனாகலாம் என்பதை உலகிர்க்குணர்த்திய தலைவராக, அரசியல் அகிலத்தின் அருந்தலைவர்களிற் சிறந்தவராக, ஜனநாயக சோஷலிஸத்தின் சிற்பியாக, காந்திஜியின் வாரிசாக, இந்திய ஆட்சிபீடத்தின் ஆணிவேராக, விடுதலை இயக்கத்தின் சேனாதிபதியாக, தன்னலமற்ற தியாக சீலராக, திரிகரண சுத்தியுள்ள சத்தியவந்தராக, நிர்வாகத்திலே தென்னாட்டு ஜவஹராக, சிந்தனையிலே தென்னாடு பெர்னாட்ஷாவாக, அஞ்சாத நெஞ்சு படைத்த தீரராக, ஏழை மக்களின் காவலராக, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக விளங்கும்

உயர் திரு

K. காமராஜ் நாடார்

அவர்கள்



நீதியிலும் நேர்மையிலும் நிகரற்று விளங்கும் நவபாரதத்தின் சிற்பி, நான்கு வேதங்களுங்கண்ட நற்றுறைகள் அனைத்திற்கும் நற்சான்றாக விளங்கும் புனிதப் பரம்பரையிலுதித்த பெம்மான் சகல கலைகளிலும் ஒப்பற்ற ஞானக் களஞ்சியம், சொற்போர் மன்னர், பேனா முனையிலே தீரர், எஃகு உள்ளம் படைத்தவர் சிந்தனைக் களஞ்சியம், காங்கிரசின் சிகரம், தெய்வபக்தியின் சின்னம், சுயநலத்தைக் கருதாது இந்நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தனிப்பெருந் தலைவர், நினைவிலும் சொல்லிலும், செயலிலும், அப்பழுக்கற்ற உத்தமர், பலகோடி மக்கட்கு நீதி வழிகாட்டியாகத் திகழும் சத்தியவந்தர், விடுதலை இயக்கத்தின் சிற்பி, மத்திய சர்க்காரின் ஆட்சிபீடத்தமர்ந்து நிர்வாகத் தீரர் என்று புகழ் பெற்று சென்னை சர்க்காரால் விரும்பி அழைக்கப்பட்ட பேரறிஞர், பன்மொழி பயின்ற பாரதத் திலகம் பெருந்தகையாளர், பரோபகாரி, தாயகத்தின் தவப்புதல்வர் முன்னாள் அமைச்சர்.

உயர்திரு

R. வெங்கட்ராமன், B.A., B.L.

அவர்கள்




அனைத்து நாடுகளின் ஆட்சி பீடங்களும் அறிஞர் எனப் போற்றும் அண்ணலாக, நாட்டையாளும் நற்றிரம் படைத்த தீரராக, தேச மக்களின் பசிப்பிணி நீங்கி உணவில் தன்னிறைவு பெறச்செய்யும் தவப் பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட தவப்புதல்வராக, அறத்துறையிலே தமிழனின் கீர்த்திக்குச் சான்ருக விளங்கும் தலைவராக, இணையற்ற பேரறிஞராக, எதிர்க் கட்சிகளைக் கலங்க வைக்கும் தீரராக, எக்கேள்வியாயினும் அக்கணமே பதிலறையும் அறிவு ஒளியாக, அதர்மத்தை அழிப் பதிலே அஞ்சாத நெஞ்சு படைத்த வீரராக, சென்னை சர்க்காரின் கீர்த்திக்குக் காரணகர்த்தராக, மத்திய சர்க்காரின் புகழ்பெற்ற முன்னாள் அமைச்சராக விளங்கும்,

உயர்திரு

C. சுப்ரமண்யம் B.A.,B.L,

அவர்கள்



அமைச்சர் அவையின் ஆணிவேராகி, சென்னை ஆட்சி பீடத்தின் அச்சாணியாக, காந்தியத் தத்துவத்தின் திலகமாக, தேசாபிமானச் செம்மலாக, உயரிய தமிழனின் கீர்த்திக்கு எடுத்துக்காட்டாக, சட்ட மேதையாக, பட்டப் படிப்பின் உயரத்தை எட்டிய ஒப்பற்ற அறிஞராக, ஆண்மைகொண்ட நெஞ்சினராய், அறத்தினை நிலைநாட்ட ஆர்வம் மிக்கவராய், தொல்குடித் தோன்றலாய், அகில உலக அரசியல் தத்துவக் களஞ்சியமாய், புனிதமான லட்சிய சீலராக, சொன்னதை ஆற்றிக் காட்டும் கர்ம வீரராக விஞ்ஞானத்தையும், வேதாந்தத்தையும் ஒரு முனையாகச் செயலிலே முறையினோடு ஆற்றிக் காட்டும் மதிவாணராக பல கோடி மக்களின் பேராதரவு பெற்று விளங்குகிற முன்னாள் அமைச்சர், சென்னை மேல்சபையின் தலைவர்,

உயர்திரு

M. A. மாணிக்கவேலர் M.A., B.A.B.L., M.L.C.

அவர்கள்




ஆழ்ந்த சிந்தனையிலும், அறமியற்றும் அருந் துறையிலும், அருட்பொறையிலும், அனாதைகளின் அவல நிலை கண்டு அகங் கலங்கி ஆதரித்து ஆவன செய்யும் அருட்குணத்திலும், அன்பிலும் ஒப்பற்று, தேசீயத்திலே தென்னாட்டுக் கஸ்தூரிபாயாக, ஆட்சி பீடத்திலமர்ந்து, ஆடவிகட்கும் ஆளத்தெரியுமென்பதை அகிலத்திற்கு உணர்த்திய அறிவுக் களஞ்சியமாக, தேசீயக் காங்கிரசின் பெண் பகுதிக்கே பேருணர்ச்சியும் பக்தியும் பெருகிப் பலம்பெறக் காரணமாக, உழைக்கும் உத்தமியாக, பேச்சிலும், சிந்தனையிலும், சிறப்புற்று, தாயுள்ளத்தினொடு மக்கள் குறையைத் தீர்க்கத் தாகங்கொண்ட தலைவியாக தமிழ்நாடு முன்னாள் அமைச்சராக விளங்கும்,

ஸ்ரீமதி லூர்தம்மாள் ஸைமன்

அவர்கள்

Protector of Hindu Dharma The Famous Head of Tirukkalar Mutt



Sri-La-Sree M. Krishnananda Swamigal Tirukkalar

Thanjavur Dt. (S. India)

Editor:- VIBOOTHI VEERAMUTHU SWAMY

Copies-5000